**இணை ஆணையர் (மாவ), சென்னை (மையம்) கோட்டம், சென்னை–6**
**அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திருமதி. கி. சுகந்தி, B.P.T., M.B.A.,**
**இடம் : வணிகவரி கட்டிடம், கிரிம்ஸ் சாலை 3வது மாடி, சென்னை–6**

இணை ஆணையர் (மாநில வரி) அலுவலகம் 63 27 JAN 2025

நக.எண். 5654 /2022/அ2 நாள்: 23 .01.2025.

| | |
|---|---|
| பொருள்: | பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – சென்னை (மையம்) கோட்டம் – திருமதி.R.ராதா, என்பவர் கருணை அடிப்படையில் 20.10.20223 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து – ஆணை வழங்குவது – தொடர்பாக. |
| பார்வை : | 1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ–1)த் துறை, நாள் 23.01.2020.<br>2. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள் 08.03.2023.<br>3. இணை ஆணையர் (மாவ), சென்னை (மையம்) கோட்டம் அவர்களின் செயல்முறை ந.க.எண்.5654/2022/அ2, நாள் 13.10.2023.<br>4. இணை ஆணையர் (மாவ), சென்னை (மையம்) கோட்டம் அவர்களின் கடித ந.க.எண்.5654/2022/அ2, நாள் 22.05.2024.<br>5. வணிகவரி ஆணையர் அவர்களின் அலுவலகக் கடித எண்.ஒய்–3/7853047/2024, நாள் 23.07.2024.<br>6. அரசு கடித எண்.8016992/அ2/2024–1, நாள் 11.11.2024.<br>7. வணிகவரி ஆணையர் அவர்களின் அலுவலகக் கடித எண். ஒய்–3/7853047/2024, நாள் 02.12.2024. |

&&&&&&&&&

B1

**ஆணை :**

வணிகவரித் துறையில், சென்னை (மையம்) கோட்டத்திற்குட்பட்ட உதவி ஆணையர் (மாவ) அலுவலகம், பாண்டிபஜார் வரிவிதிப்பு வட்டத்தில் துணை மாநில வரி அலுலராகப் பணிபுரிந்தபோது 16.07.2022 அன்று மரணமடைந்த திருமதி. க.சீனிவாசன் என்பவரின் மனைவி திருமதி.R.ராதா என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 16.09.2022 அன்று விண்ணப்பம் சமர்ப்பித்திருந்தார். விண்ணப்பம் அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் பெறப்பட்டுள்ளதாலும், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சான்றுகள்/ஆவணங்கள் பரிசீலக்கப்பட்டதில், மறைந்த அரசு ஊழியரின் மனைவி திருமதி.R.ராதா என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று இளநிலை உதவியாளர் பதவிக்கு தகுதியானவர் என்பதாலும், இதன் காரணமாக மனுதாரரின் கோரிக்கை நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட இணை ஆணையர் (மாவ), சென்னை (மையம்) கோட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி திருமதி.R.ராதா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது, இதன் தொடர்ச்சியாக, தனியாளர் 20.10.2023 முற்பகல் முதல் துணை ஆணையர் (மாவ), மையம்–2 அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

தனியாளர் பணியில் சேர்ந்த நாளான 20.10.2023 முற்பகல் முதல் தனியாளரின் பணியினை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் வணிகவரி ஆணையர் அவர்களிடம் கோரப்பட்டது. பார்வை 5-ல் கண்ட கடிதத்தில் வணிகவரி ஆணையர், தனியாளரின் பணியினை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டதற்கு, பார்வை 6-ல் காணும் அரசு கடிதத்தில் பார்வை 2-ல் கண்ட அரசாணை தமிழ்நாடு குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையில் பணிநியமனம்) விதி 16-இல் உள்ளதற்கிணங்க,

*"Each appointing authority shall regularize the services of the person appointed under these rules within a period of one year from the date of his/her joining service, subject to eligibility".*

நியமன அலுவலரே மேற்படி தனியாளரின் கருணை அடிப்படையில் பணி நியமனத்தின் பணியினை பணிவரன்முறைப்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.மேற்கூறிய அரசு கடிதமும் மற்றும் வணிகவரி ஆணைய அவர்களின் அறிவுரைகளின் படியும், வணிகவரித் துறையில், சென்னை (மையம்) கோட்டம், உதவி ஆணையர் (மாவ), பாண்டி பஜார் வரிவிதிப்பு வட்டத்தில் துணை மாநில வரி அலுவலராக பணிபுரிந்தபோது 16.07.2022 அன்று மரணமடைந்த திரு.க.சீனிவாசன் என்பவரின் மனைவி திருமதி.R.ராதா என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், துணை ஆணையர் (மாவ), மையம்-2 அலுவலகத்தில் கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணியை, தனியாளர் பணியில் சேர்ந்த நாளான 20.10.2023 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வரன்முறை செய்து ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப்படுத்தப்படுவதால், தனியாளர், ஆண்டு ஊதிய உயர்வு பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ஒம்/- கி. சுகந்தி,
இணை ஆணையர் (மாவ),
சென்னை (மையம்) கோட்டம்,

பெறுநர்
திருமதி.R.ராதா.
(உரிய தலைமை அலுவலர் மூலமாக).

நகல்

1. வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. துணை ஆணையர் (மாவ), மையம்-. 2 சென்னை-6.
3. உதவி ஆணையர்கள் (மாவ), கீழ்பாக்கம் வரிவிதிப்பு வட்டம், சென்னை.
4. இருப்புக் கோப்பு-1.

// உண்மை நகல் //

இணை ஆணையரின் நேர்முக உதவியாளர்,
சென்னை (மையம்) கோட்டம்.